28.07.2025

OS No: 55/2014

வா.சா. 2 திரு. அப்துல் ரகுமான் த/பெ. முகமது சுல்தால்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

கிரையம் எழுதுவதற்கான முத்திரை தாள் எங்கு வாங்கப்பட்டது என்றால் திருப்பத்தூரில் வாங்கப்பட்டது. பிரதிவாதி என்னிடம் ரூ.1 லட்சம் கடனாக கேட்டார் என்றும் அதற்கு நான் 19.07.2013 அன்று ரூ.49,000/- ம் 24.07.2013ம் தேதி ரூ.49000/-ம் பிரதிவாதிக்கு கொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பில் சங்கதி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த தேதியில் இருந்து 3 மாத காலத்தில் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றிட வேண்டும் என ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தை பிரதிவாதி நிறைவேற்ற தவறிவிட்டார் என்பதற்காக வா.சா.ஆ.6 அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கண்ட சொத்தில் நான் ஆககிரமிப்பு செய்யக்கூடாது என பிரதிவாதி எனக்கு எதிராக திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS No.28/2014 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்திற்கு பின்பு தாவா சொத்தின் சுவாதீனத்தை நான் எடுத்திருந்தேன். கிரைய ஒப்பந்த தேதியில் எனக்கு சுவாதீனம் ஒப்படைப்பதாக கிரைய ஒப்பந்தத்தில் சங்கதி எழுதப்படவில்லை என்றால் சரிதான். சுவாதீனம் என்னிடம் ஒப்படைப்பதற்கு கிரைய ஒப்பந்தத்தில் சங்கதி இல்லாத நிலையில் தாவா சொத்தின் சுவாதீனத்தை எதன் அடிப்படையில் நான் எடுத்துக்கொள்டேன் என்றால் பிரதிவாதி என்னிடம் பெற்ற கடன் தொகையை கொடுக்கவில்லை என்பதால் எடுத்துக்கொண்டேன். கிரைய ஒப்பந்ததிற்கு பிறகு பிரதிவாதி மீதும் அவரது தாயார் மீதும் எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் எனறால் கன்டவராயன்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். பிரதிவாதி என் மீது OS.28/2014 வழக்கை தாக்கல் செய்ததற்கு பின்பு தான் தாவா வழக்கை நான் பிரதிவாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த காலத்திற்குள் பிரதிவாதி கிரையம் பதிவு செய்து கொடுத்திட தயாராக இல்லை என

குறிப்பிட்டு கிரைய ஒப்பந்தத்தில் நிர்னயம் செய்யப்பட்ட காலத்திற்குள் நான் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தபிறகும், அதன் பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகும், அதன் பிறகு சுவாதீனத்தை நான் எடுத்துக்கொண்ட பின்பும் பிரதிவாதி கிரையம் கொடுக்க வரவில்லை என்பதால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சட்டப்படி கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற பிரதிவாதி தவறும் பட்சத்தில் சட்டப்படி தான் பிரதிவாதிக்கு எதிராக நான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதை விடுத்து காவல் துறையில் புகார் கொடுப்பதோ சுவாதீனத்தை நானாக எடுத்துக்கொள்வதோ முடியாது என்றால் காவல் துறையில் என்னை பிரதிவாதி மிரட்டியதாலும் ஆபாசமாக பேசியதாலும் புகார் கொடுத்தேன். சுவாதீனத்தை எடுத்தது கிரைய ஒப்பந்தப்படி பிரதிவாதி கிரையம் எழுதி தர வரவில்லை என்பதால் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டேன். பிரதிவாதியும் அவரது தாயாரும் என்னை மிரட்டவோ ஆபாசமாக பேசவோ இல்லை என்றும், அவர்கள் மீது நான் தான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் பிரதிவாதி என்னிடம் 3 லட்சம் கிரைய முன்பணமாக பெறவில்லை என்றும் கிரையம் ஒப்பந்தமும் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ. 1 லட்சம் கடனாக பெற்றார் என்றும் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடன் தொகை ரூ.1 லட்சம் திருப்பி செலுத்த பிரதிவாதி தயாராக உள்ளார் என்று சொன்னால் அது தவறு, தாவா சொத்திற்காக தான் கொடுத்தேன். வழக்கு சொத்தை நான் அபகரிக்க வேண்டும் என்பதற்காக எனக்கு வேண்டிய நபர்களை பொய்யாக சாட்சி கையெழுத்து செய்து வழக்கு நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.28 17:49:32 +0530

28.07.2025

OS No: 55/2014

வா.சா. 2 திரு. சேக் அப்துல்லா த/பெ. பிச்சை முகமது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்த ஊர் திருப்பத்தூர் ஆகும். வா.சா.1 எனது உறவினரா என்றால் ஆமாம். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கைக்கில் கடை வைத்துள்ளேன். வழக்கு சொத்தை கிரையம் பேசிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எங்கு வைத்து கிரையம் பேசினார்கள் என்றால் வேலங்குடியில் வைத்து கிரையம் பேசினார்கள். எந்த தேதியில் கிரையம் பேசினார்கள் என்றால் 15.07.2013 ஆகும். வழக்கு சொத்தை வாதியும் பிரதிவாதியும் கிரையம் பேசியதாக சொல்வதும், வேலங்குடியில் வைத்து மேற்படி கிரையம் பேசியதாக சொல்வதும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய முன் பணமானது எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் கிரையம் பதியும் போது திருப்பத்தூரில் வைத்து கொடுத்தார். சாட்சி கையெழுத்து யார் யார் செய்தது என்றால் நான் முதலாவதாகவும், மற்றோருவர் எனக்கு நியாபகம் இல்லை. தாவா சொத்தை வாதிக்கு பிரதிவாதி கிரையம் பேசவில்லை என்றும் தாவா வழக்கில் சொல்லப்படும் கிரைய ஒப்பந்த பத்திரம் எதுவும் பிரதிவாதி வாதிக்கு எழுதி தரவில்லை என்றும் வாதி எனக்கு உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.28 17:49:38 +0530